செ.வெ.எண். 25 நாள் :10.11.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா**
**12.11.2017 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பங்கேற்பு.**

----

பாரத ரத்னா புரட்சித்தலைவரின் எண்ணம், குறிக்கோள் மற்றும் செயல் அனைத்தும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றுவதற்காகவே இருந்தது. அவருடைய வழியை பின்பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, ஏளிய மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்த்தார்கள்.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவை போற்றும் வகையிலும், அவர் ஆற்றிய பணிகள், அவர் பற்றிய வரலாறு இன்றைய இளைஞர்கள் மற்றும் வருங்கால சந்ததியினர் அறிந்திடும் வகையில் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா தமிழ்நாடு அரசின் சார்பில் மிக சிறப்பாக அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அதன் தொடக்கவிழா 30.06.2017 அன்று மதுரை மாநகரில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் 22.07.2017, திருவண்ணாமலை மாவட்டத்தில் 29.07.2017, பெரம்பலூர் மாவட்டத்தில் 05.08.2017, விழுப்புரம் மாவட்டத்தில் 09.08.2017, கடலூர் மாவட்டத்தில் 16.08.2017, திருவாரூர் மாவட்டத்தில் 19.08.2017, அரியலூர் மாவட்டத்தில் 23.08.2017, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30.08.2017 மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் 03.09.2017, ஈரோடு மாவட்டத்தில் 06.09.2017 வேலூர் மாவட்டத்தில் 09.09.2017, நாமக்கல் மாவட்டத்தில் 17.09.2017, நாகப்பட்டினம் மாவட்டத்தில் 20.09.2017, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 23.09.2017, நீலகிரி மாவட்டத்தில் 26.09.2017, சேலம் மாவட்டத்தில் 30.09.2017, கரூர் மாவட்டத்தில் 04.10.2017, தருமபுரி மாவட்டத்தில் 07.10.2017, புதுக்கோட்டை மாவட்டத்தில் 14.10.2017, விருதுநகர் மாவட்டத்தில் 23.10.2017, திருச்சிராப்பள்ளியில் 26.10.2017 தேனியில் 09.11.2011 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்தும், அரசின் பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா தொடர்பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கியும் சிறப்பிக்கவுள்ளார்கள்.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா நடைபெறும் மாவட்டங்களில், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரைப்படங்கள் மற்றும் அரசியல் மூலம் அவர்கள் ஆற்றிய சமூகத்தொண்டு, சீர்திருத்தங்கள் மற்றும் திட்டங்கள் பற்றியும் பள்ளி மாணவ, மாணவிகள் அறிந்திடும் வகையில் கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி,

ஓவியப்போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விழாவின்போது பொதுமக்கள் பார்வையிடும் வகையில் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், எம்.ஜி.ஆர். அவர்கள் பற்றிய குறும்படமும், அவர் நடித்த திரைப்படங்களும் கிராமப்புறங்களில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு திரை கொண்ட விளம்பர வாகனத்தின் மூலம் திரையிடப்பட்டு வருகின்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை பெல் மைதானத்தில் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா 12.11.2017 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மிக சிறப்பாக நடைபெறவுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இவ்விழாவில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள். இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் தலைமை வகிப்பார்கள். மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர்.மு.தம்பிதுரை அவர்கள் சிறப்புரை ஆற்றுவார்கள். மேலும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் முன்னிலை வகிப்பார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து ரூ.118.02 கோடி மதிப்பிலான முடிவுற்ற 192 திட்டப் பணிகளை திறந்து வைத்தும், ரூ.528.91 கோடி மதிப்பிலான 142 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 34655 பயனாளிகளுக்கு ரூ.87.74 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி விழாப்பேருரையாற்றுவார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டப் பேரவை துணைத் தலைவர், அரசு தலைமை கொறடா, மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி (புதுடெல்லி) மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.முத்துக்கருப்பன், திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் (திருநெல்வேலி), திருமதி.வசந்தி முருகேசன் (தென்காசி), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்முருகையாபாண்டியன் (அம்பாசமுத்திரம்), திரு.எஸ்.செல்வமோகன்தாஸ் பாண்டியன் (தென்காசி), திரு.ஐ.எஸ்.இன்பதுரை (ராதாபுரம்), திரு.எ.மனோகரன் (வாசுதேவநல்லூர்), ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர். கிரிஜா வைத்தியநாதன்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றுவார்கள், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றுவார்கள்.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விழா நடைபெறும் நாள் அன்று காலை 10 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகைப்படக் கண்காட்சியை திறந்து

வைக்கவுள்ளார்கள். நண்பகல் 1.00 மணியளவில் புரட்சித் தலைவர் புகழ்பாடும் இன்னிசை நிகழ்ச்சி மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி, அவர்கள், திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி.**